අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/05/67/28/06 (III වෙළුම) මබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2023.05.22

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்/ பீடாதிபதிகள்,

<u>முதன்மை தொழில்நுட்பம் அல்லாத பணியாளர் வகை (PL-1) மற்றும் அரை தொழில்நுட்ப பணியாளர் வகை (PL-2) மற்றும் முதன்மை தொழில்நுட்ப பணியாளர்கள் (PL-3) வினைத்திறன் தடைதாண்டலுக்கான விண்ணப்பம் கோரல் 2022</u>

மேற்படி சேவை வகைகளின் பணியாளர்கள் தொடர்பான பதவியுயர்வு, நிரந்தரமாக்குதலை மேற்கொள்வதற்காக அச் சேவை வகைகளுக்குரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை உடனடியாக நடாத்தும் தேவையினை கருதி நாட்டில் தற்போது நிலவும் நிலைமைகளை காரணமாகக் கொண்டு குறைந்த வளப் பாவனையின் மூலமாக இச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

02. எனவே கீழ்வரும் முறைமையினை பின்பற்றுவதன் மூலமாக உங்கள் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் தாள்கள், நகல் இயந்திர பாவனை போன்றவற்றை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அம்முறைமையினை பின்பற்றுவது கட்டாயமானதுடன், அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளும் போது உங்கள் அலுவலகத்தின் விண்ணப்பதாரர்களின் சுயவிபரக்கோவையினை பரிசீலனை செய்து, அதன்படி உரிய தகவல்களை முன்வைப்பதனை கவனத்திற் கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்

03. அதற்காக பின்பற்ற வேண்டிய செயல்முறை பின்வருமாறு.

I. மாதிரி விண்ணபத்தில் கீழ் மூலையில் () என குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பின்பற்றி உரிய விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை உறுதிப்படுத்தி, விண்ணப்பத்தின் மென் பிரதிகளை (**Scan copy / photo image**) **Google forms** க்கு பதிவேற்றம் செய்வதற்கும்

II. மேற் காட்டப்பட்ட **Google Forms** பூர்த்தி செய்யும் போது சுயவிபரக்கோவையின் படி விண்ணப்பதாரர்களின் உள்ளீர்ப்பு கடிதம், வினைத்திறன் தாண்டல் பெறுபேற்று ஆவணம், நியமனக் கடிதம் மற்றும் தகுதிகான் கால இறுதியில் நிரந்தரமாக்கும் கடிதம் போன்ற ஆவணங்களை பரிசீலனை செய்து உள்ளடக்குவதற்கும்,

III. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி தினமான 2023.06.15 திகதி வரை முன்வைக்கப்படும் சகல விண்ணப்பங்களையும் விரைவாக மேற் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதற்கும்,

IV. ஏதோ ஒரு வகையில் விண்ணப்பதாரர்களுக்கு அமைச்சினால் வழங்கப்பட்ட பதவியுயர்வு கடிதம், வினைத்திறன் தடைதாண்டல் பெறுபேற்று ஆவணம் இருப்பின் , எந்தவொரு பதவியுயர்வு அல்லது வினைத்திறன் தடைதாண்டல் பெறுபேற்று ஆவணம் இதுவரை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் அவர்களின் முதல் நியமனக் கடிதத்தினை பரீட்சையின் போது முன்னிலைப்படுத்துவது கட்டாயமாகும். ஏதேனுமொரு விண்ணப்பதாரரிடம் முதல் நியமனக் கடிதம் இல்லாத சந்தர்ப்பத்தில் விரைவாக சுயவிபரக்கோவையிலுள்ள உறுதிப்படுத்திய பிரதியினை அவர்களிடம் வழங்குவதற்கும்.

04. இது குறித்து தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை மதிப்பதுடன் 011 2785867, 011 2784794 என்ற தொலைபேசி ஊடாக இணைந்த சேவைகள் அல்லாத கிளையுடன் தொடர்பு கொண்டு தேவையான தெளிவுகளை பெற்றுக் கொள்ளலாம் என்பதனை மேலும் அறியத்தருகின்றேன்.

ஆர்.பீ.கங்கேவல
மேலதிக செயலாளர் (கல்விசாரா மற்றும் ஒருங்கிணைந்த சேவை)
செயலாளருக்காக

**Google Form Password -**